**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், பழனி**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 5ம் நாள்**
**2026ம் வருடம் ஜூலை திங்கள் 21ம் நாள் செவ்வாய்க்கிழமை**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 31/2014

அரசுக்காக – சார்பு ஆய்வாளர்,
பழனி நகர் கா.நி.கு.எண்.607/2013 ... **குற்றமுறையீட்டாளர்**

**/எதிர்/**

சொக்கலிங்கம், 47/2013
த/பெ.இருளப்பன்,
பங்களா தெரு,
நெய்க்காரப்பட்டி,
பழனி. ... **எதிரி**

இவ்வழக்கு 25.02.2014 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு.உ.B.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆரிப்தீன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–**

கடந்த 08.09.2013ம் தேதி 22.00 மணியளவில் பழனி பஸ்நிலையத்தில் சாமான்கள் வைக்கும் அறைக்கு அருகில் வாதி தனது மகன் திருமணத்திற்கு வா போகலாம் என்று எதிரியை கூப்பிட அதற்கு எதிரி ஏண்டா தேவுடியா பயலே என்று அசிங்கமாக பேசியதாகவும், பின்னர் இருவருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் வாதியை எதிரி கீழே தள்ளிவிட்டு, தலை பின்புறம் ஆகிய இடங்களில் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், எனவே, எதிரி இ.த.ச பிரிவுகள் 294(பி), 325ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது பழனி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் எதிரியிடம் குற்றச்சாட்டுக்கள் குறித்து வினவியபோது அவர் குற்றத்தினை மறுத்துள்ளார், இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 325ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் விளக்கி வினவியபோது அவர் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –

கடந்த 09.09.2013ம் மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று 10.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று சுப்பிரமணியன் என்பவர் தலையில் அடிபட்டு மயக்க நிலையில் இருந்ததால் அவர் அண்ணன் முருகேசன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று காவல்நிலைய கு.எண்.607/2013 பிரிவுகள் 294(b),324 இ.த.ச பிரிவின் கீழ் அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 பதிவு செய்து, பழனி பஸ் நிலையத்தில் ஜாமான் வைக்கும் அறை முன்பு உள்ள சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் சின்னப்பன், குப்புராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வைமகஜர் தயார் செய்து அ.சா.ஆ.5 மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்பு பட்டியல் சாட்சிகள் முருகேசன், சுப்பிரமணி, கருப்புசாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, 09.09.2013ம் தேதி மதியம் 13.30 மணிக்கு எதிரியை பழனி பஸ் ஸ்டாண்டில் வைத்து கைது செய்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து, 17.09.2013ம் தேதி

காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் நட்ராஜன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.2 காயச்சான்று பதிவு செய்து, காயச்சான்றில் பட்டியல் சாட்சி–1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் தன்மைக்கேற்ப பிரிவுகள் 294(b), 324 இ.த.ச விலிருந்து 294(b), 325 ஆக அ.சா.ஆ.6 சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து, நேரடி விசாரணையில் இருந்தும், மறைமுக விசாரணையில் இருந்தும் குற்றம் நடந்தது உண்மை என தெரிய வந்ததால் 09.10.2013ம் தேதி எதிரி மீது 294(b), 325 இ.த.ச.வின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிவுற்றது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான சங்கதிகளை எதிரியிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி பொய்சாட்சி என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, எதிரி சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரி மீதான 294(பி), 325ன் கீழ் உள்ள குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பால் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரியானவர் வாதியை அசிங்கமாக பேசி, ரத்தக்காயத்தை ஏற்படுத்திய செயலானது அ.சா.1 முதல் அ.சா.4 ஆகிய சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

9. எதிரி தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார் –

எதிரியானவர் வாதியை அசிங்கமாக பேசி, ரத்தக்காயத்தை ஏற்படுத்திய செயலானது அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே எதிரிக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார், எனவே, எதிரிக்கு எதிரானக் குற்றச்சாட்டுக்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. தீர்வு –

கடந்த 08.09.2013ம் தேதி 22.00 மணியளவில் பழனி பஸ்நிலையத்தில் சாமான்கள் வைக்கும் அறைக்கு அருகில் வாதி தனது மகன் திருமணத்திற்கு வா போகலாம் என்று எதிரியை கூப்பிட அதற்கு எதிரி ஏண்டா தேவுடியா பயலே என்று அசிங்கமாக பேசியதாகவும், பின்னர் இருவருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டதில் வாதியை எதிரி கீழே தள்ளிவிட்டு, தலை பின்புறம் ஆகிய இடங்களில் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டதாகவும், எனவே, எதிரி மீது நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் வாக்குமூலம் கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

11. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 08.09.2013ம் தேதி காலை 10.00 மணிக்கு பழனி பஸ்நிலையம் அருகே தான் கடையிலிருந்தபோது, எதிரியானவர் அ.சா.1ஐ கல்யாணத்திற்கு வா என்று கூப்பிட்டதாகவும், இரண்டு பேருக்கும் இடையில் வாக்குவாதமாகி ஆஜர் எதிரி வாதியை கீழே தள்ளிவிட்டதாகவும், பின்பக்க மண்டை உடைந்து காதில் இரத்தம் வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 08.09.2013ம் தேதி காலை 10.00 மணியளவில் பழனி பஸ்நிலையத்திலுள்ள டீக்கடையிலிருந்தபோது எதிரி தாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது தன்னை கீழே தள்ளிவிட்டதாகவும், எதிரியை கல்யாணத்திற்கு போகலாம் என்று கூப்பிட்டதற்கு அவர் தன்னை அசிங்கமாக பேசி,

கீழே தள்ளிவிட்டதாகவும், தனக்கு பின் மண்டையிலும், காதிலும் அடிப்பட்டு ரத்தம் வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. இந்த வழக்கில் அ.சா.2 பேசிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரியை அ.சா.2 திருமணத்திற்கு போகலாம் என்று கூப்பிட்ட போது அசிங்கமாக பேசி, கீழ தள்ளிவிட்டு, தலையிலும் காதிலும் இரத்தம் வந்து மருத்துவமனையில் சேர்ந்தார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் அ.சா.2க்கும் எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு அ.சா.2ஐ கீழே தள்ளிவிட்டு, மண்டையில் உடைந்து ரத்தம் வந்தது என்று சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் காயப்பட்ட அ.சா.2ஐ தனது சகோதரர் என்றும், காயம்பட்ட விவரம் அ.சா.1 மருத்துவமனைக்கு வந்த பின்பு தான் தெரியும் என்றும், மருத்துவமனையில் இருந்து போன் மூலம் தகவல் கிடைத்துதான் மருத்துவமனைக்கு வந்தார் என்றும், அ.சா.2 தனது காயம் குறித்து தன்னிடம் எதுவும் சொல்லவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியம் இந்த வழக்கின் சூழ்நிலையை முற்றிலும் முரண்படுத்துவதாக அமைந்துள்ளது. அதே நேரத்தில் அ.சா.2 ஆனவர் காயப்பட்ட நபர் என்பதால் அவர் அளித்துள்ள சாட்சியத்தை வைத்து பார்க்கும் போது அ.சா.2ஐ எதிரி கீழே தள்ளிவிட்டார் என்று சாட்சியமளித்துள்ள நிலையில், அந்த சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சியாக இருந்து புகார் வாக்குமூலம் கொடுத்த அ.சா.1 முற்றிலும் வழக்கு சம்பவத்திற்கு எதிராக சாட்சியமளித்துள்ள விவரம் காயம்பட்ட அ.சா.2ன் சாட்சியத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

15. அ.சா.1ம், அ.சா.2ம் உடன் பிறந்த அண்ணன் தம்பியாக இருக்கும் நிலையில், புகார் வாக்குமூலம் கொடுத்து சாட்சியமளித்த அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியம், இந்த வழக்கில் சொல்லியுள்ள காயமானது அ.சா.2க்கு எதிரியால்தான் ஏற்படுத்தப்பட்டது என்று முன்வைக்கப்பட்டுள்ள வழக்கை பாதிக்கும் வகையில் ஒரு தகுநிலை சந்தேகத்தை ஏற்படுகிறது. அ.சா.2க்கு காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்பது அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.2

ஆகியவற்றிலிருந்து மிகத் தெளிவாக தெரிகிறது. ஆனால் மேற்படி காயம் ஏற்படுத்தியது எதிரி தான் என்று முன்வைக்கப்பட்டுள்ள வழக்கில் மேற்சொன்ன வகையில் தகுநிலை சந்தேகங்கள் எழுந்துள்ளதால் அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள இ.த.ச பிரிவு 325ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்ற முடிவு செய்கிறது.

16. அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் என்ன வார்த்தைகளை சொல்லி எதிரி திட்டினார் என்று குறிப்பிட்டு எந்தவித சாட்சியமும் அளிக்காத காரணத்தினால் இ.த.ச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்ற முடிவு செய்கிறது.

17. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 294(பி), 325ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எல்லா தகுநிலை ஐயப்பாட்டுக்கு அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை குற்றவாளி இல்லை என்று கண்டறிகிறது.

18. முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 294(பி), 325ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**<u>19. வழக்குச் சொத்து</u> –**

இந்த வழக்கில் வழக்குச்சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூலை திங்கள் 21ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 18:14:28 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**அரசு தரப்பு சாட்சிகள் –**

| | |
|---|---|
| அ.சா.1 | முருகேசன் |
| அ.சா.2 | சுப்பிரமணி |
| அ.சா.3 | நடராஜன் |
| அ.சா.4 | ராஜகண்ணன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் –**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலம் | 09.09.2013 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | காயச்சான்று | 10.09.2013 | அ.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |
| 3 | முதல் தகவலறிக்கை | 09.09.2013 | அ.சா.ஆ.3 | அ.சா.4 | அசல் |
| 4 | பார்வை மகஜர் | 09.09.2013 | அ.சா.ஆ.4 | அ.சா.4 | அசல் |
| 5 | மாதிரி வரைபடம் | 09.09.2013 | அ.சா.ஆ.5 | அ.சா.4 | அசல் |
| 6 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | 17.09.2013 | அ.சா.ஆ.6 | அ.சா.4 | அசல் |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்:–** இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் –** இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 18:14:35 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**குறிப்பு :–**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
5. தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Palani

Calendar of cases tried by the Judicial Magistrate of Palani.

| Date of Judgment : 21.07.2026 | | | | | | | | | Explanation of delay and remarks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Offence** | **Report of complaint** | **Apprehension of accused** | **Released on Bail** | **Commence ment of trial** | **Close of trial** | **Sentence or order** | | | |
| 08.09.2013 | 09.09.2013 | 09.09.2013 | 10.09.2013 | 15.04.2014 | 25.03.2026 | 21.07.2026 | F.I.R. Date:<br>Charge Sheet Date:<br>D.O.P.<br>D.O.F. | 09.09.2013<br>09.10.2013<br>25.02.2014<br>10.12.2013 | Complainant side evidence till 07.07.2026 |

Judgment in CC 31/2014 on the file of the Judicial Magistrate of Palani.

Complainant: The Sub-Inspector of Police, Palani Town P.S in Cr.No.607/2013

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Chokkalingam | 47/2013 | Irulappan |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| Hindu | -- | Neikkarapatti | Palani |

**Offence :** U/s.294(b), 325 IPC

**Sentence :** Accused was found not guilty from the charges U/s. 294(b), 325 IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 18:14:42 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

Judicial Form No.61

(See Rule 106)

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE COURT, PALANI

JUDGMENT IN CC 31 OF 2014

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE, PALANI

Complainant : Sub-Inspector of Police, Palani Town PS.

Accused : 1) Chokkalingam

Offence : Section 294(b), 325 IPC

**Finding** : Accused is found guilty

**Sentence** : Accused was found not guilty from the charges U/s. 294(b), 325 IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

**Property** : NIL

| Sl. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Chokkalingam | Irulappan | ----- | ----- | Palani | 47/2013 |

| Date of | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commence ment of trail | Close of trail | Sentence or order |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 08.09.2013 | 09.09.2013 | 09.09.2013 | 10.09.2013 | 15.04.2014 | 25.03.2026 | 21.07.2026 |

| Explanation of delay |
|---|
| (15) |
| Complainant side evidence till 07.07.2026 |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 18:14:48 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**Case Summary in CC 31/2014**

| S. No | Description | Remarks |
|---|---|---|
| 1 | The Period of Remand of the Accused/Surrender | 09.09.2013 |
| 2 | Date of filing of the Complaint/Final Report in the Court | 09.10.2013 |
| | The date of Commital of the Case to the court of session | Not applicable |
| 4 | First Questioning u/s 240 of crpc | 15.04.2014 |
| 5 | Filling of Miscellaneous petition and result | Nil |
| 6 | Date of Examination in chief and Cross examination of witness. | Witness / Chief / Cross:<br>PW1 / 23.06.2014 / 07.07.2026<br>PW2 / 23.06.2014 / --<br>PW3 / 06.06.2022 / 06.06.2022<br>PW4 / 23.02.2026 / -- |
| 7 | NBW Issued date | NIL |
| 8 | NBW recalled | NIL |
| 9 | Questionings u/s 313(i)(b) of Cr.P.C. | 25.06.2026 |
| 10 | Details of Abscondence of an accused and his appearance/production | NIL |
| 11 | Grant of stay by superior courts and the results there of | NIL |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 18:14:54 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**C.C No.31/2014**
**Date : 21.07.2026**

Accused Present. Judgment pronounced in Open Court.

Accused was found not guilty from the charges U/s. 294(b), 325 IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.21 18:15:00 +0530

**Judicial Magistrate,**
**Palani.**